டெரிக் பிரின்ஸ்

# ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப்படுதல்

*Derek Prince Ministries - India*

"GNANASTHANATHIN MOOLAM ADAKKAM PANNAPADUTHAL"

Originally published in English under the title
"BURIAL BY BAPTISM"



Published by Derek Prince Ministries - India



TA / 0514 / 2000 / LOP
ISBN 9789382910923



Published by permission in the Tamil language.

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM - IMPEX
1-C, EVR Road, Puthur
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-Mail: admin@derekprince.in
Phone: 00-91-98430 55414, 95855 38201.

Derek
Prince
MINISTRIES INDIA

www.derekprince.in

# ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப்படுதல்

ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

கொலோசெயர் 2:12

# ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப்படுதல்

*தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது இரட்சிப்போடு நேரடி தொடர்புடையது - ஞானஸ்நானம் "இயேசுவின் நாமத்தில் மட்டும்" பெற்றுக்கொள்ளலாமா? - இந்த போதனைகள் குறித்த ஒன்பது கோட்பாடுகள் இங்கு தரப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது - நீங்கள் "மீண்டும் ஞானஸ்நானம்" பெற்றுக்கொள்ளலாமா? - முக்கியமான காரியம்: அடக்கம் செய்யப்படுவதும் - உயிர்த்தெழுதலுமாகும்.*

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு செய்த பிரசங்கத்தின் இறுதியில் பாவ உணர்வு அடைந்தும் மன மாற்றமடையாதவர்களும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களும் கேட்ட கேள்வி: "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" இக்கேள்விக்கு தேவனுடைய சார்பில், பேதுரு தெளிவான பதிலை உடனே அளித்தார்: மனந்திரும்பி.... ஞானஸ்நானம் பெற்று ஆண்டவரோடு ஒப்புரவாக நினைக்கும் ஒவ்வொரு பாவிக்கும் மூன்று விசேஷித்த, ஆனால் ஒன்றுக்கொன்று தொடர்புடைய அனுபவங்கள் உண்டு: மனந்திரும்புதல், ஞானஸ்நானம் எடுத்தல், பரிசுத்த ஆவியைப்

பெறுதல் என்பதாகும். தேவனோடு ஒப்புரவாக விரும்பும் ஒவ்வொரு பாவிக்கும் தேவன் ஏற்படுத்தியுள்ள முழு திட்டம் இதுவே.

இந்த மூன்று அனுபவத்தின் நடுவில் உள்ளது தண்ணீரில் பெறும் ஞானஸ்நானம். புதிய ஏற்பாடு முழுமையிலும் நாம் காணும் காரியம் என்னவென்றால் ஞானஸ்நானம் இரட்சிப்போடு தொடர்புடையது என்பதாகும். புதிய ஏற்பாட்டுச் சபையானது இரட்சிப்படையாமல் ஞானஸ்நானம் பெறுவதை அறிந்திருக்கவில்லை. பெந்தெகொஸ்தே நாளிலிருந்து மனந்திரும்பியவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றனர். பொதுவாக அதே நாளில் (மனந்திரும்பிய அன்றே) ஞானஸ்நானம் பெற்றனர். இயேசுவைப் பற்றி சபையானது அறிவிக்கும்போது ஞானஸ்நானமும் அதில் இடம் பெற்றிருந்தது. பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று இயேசுகிறிஸ்துவை அங்குள்ள மக்களுக்குப் பிரசங்கித்தார். அதன் பலனாக, விசுவாசித்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றனர். (அப்போஸ்தலர் 8:5 12) பின்பு காசா பட்டணத்திற்குப் போகும் வழியில் எத்தியோப்பிய மந்திரியைச் சந்தித்து இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்கிறார். இதன் பலனாக அந்த மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறார். (அப். 8:35 38). எனவே புதிய ஏற்பாட்டு சபை இயேசுவைப் பிரசங்கித்த போது ஞானஸ்நானமும் அதில் ஒரு முக்கியமான போதனையாக இருந்தது.

இந்தக் காரணத்தினாலேயே சபையானது ஞானஸ்நானத்தைக் குறித்த செய்தியை அழுத்தமாகவும் தெளிவாகவும் தொடர்ந்து போதிக்க வேண்டியது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சபை சரித்திரம் முழுமையும் நாம் காணும்போது பலவிதமான கிறிஸ்தவப் பிரிவுகளைச் சார்ந்த

தலைவர்கள், மத்தேயு 28:19ல் “பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுத்து,” என்று இயேசு கூறிய பிரதான கட்டளையின் அடிப்படையில் ஞானஸ்நானம் குறித்துப் பிரசங்கித்தனர். இருப்பினும் பல சமயங்களில் இந்த அடிப்படைக் கருத்து தர்க்கத்துக்குள்ளாகியது. ஞானஸ்நானத்தைக் குறித்து பரவலாய் கூறப்படும் சாராம்சத்தைக் கீழ்கண்ட குறிப்புகளில் உள்ளடக்கலாம்.

(1) பெந்தெகொஸ்தே நாளிலிருந்து ஆதித் திருச்சபையானது இயேசுகிறிஸ்துவின் நாமத்திலேயே ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தது.

(2) மத்தேயு 28:19ல் கூறப்பட்டுள்ள ஞானஸ்நான முறையைக் குறித்து புதிய ஏற்பாட்டின் வேறு பகுதிகள் எங்கும் அது காணப்படாததால் இது சரியான முறையல்ல என்று ஒதுக்கப்படுகிறது.

(3) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

(4) இந்தப் போதனையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஞானஸ்நானம் பெற்றவர்கள், பிறகு இதனைக் குறித்து நன்கு தெளிவு பெற்றால் அவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

(5) ‘‘விருத்தசேதனம்’’ பழைய உடன்படிக்கைக்கு அடையாளமாக இருந்தது போல “ஞானஸ்நானம்” புதிய உடன்படிக்கைக்கு அடையாளமாக இருக்கிறது. எனவே சரியான முறையில் ஞானஸ்நானம் பெறாதவர்கள் ஆவிக்குரிய முறையில்

விருத்தசேதனம் பெறாதவர்களாகக் கருதப்படுவர்.

ஞானஸ்நானம் குறித்த இந்த போதனை முக்கியமானது என்பதற்கு ஞானஸ்நானம் குறித்து இது முக்கியக் கருத்துக்களை கூறுவதால் மட்டுமல்ல, இந்தக் கருத்துக்களை ஆதாரத்தோடு ஆதரித்து எடுத்துரைப்பதுவுமாகும். இக்கருத்துக்களின் தன்மை ஞானஸ்நானம் குறித்து நம்முடைய எண்ணங்களை பாதிப்பது மட்டுமல்ல புதிய ஏற்பாட்டின் கோட்பாடுகளையும் போதனைகளையும் வரையறுக்கும் அடிப்படைத் தத்துவங்களையும் பாதிக்கிறது. எனவே இந்த போதனை குறித்த ஒன்பது கருத்துக்களையும் அதன் விளக்கத்தையும் கீழே நான் விவரிக்கவுள்ளேன். இலக்கத்தை தொடர்ந்து குறிக்கப்பட்டுள்ள தவறான கருத்துகளுக்கு எனது சரியான விளக்கம் அதன் கீழே தரப்பட்டுள்ளது.

1. *மத்தேயு 28:19ல் குறிப்பிடப்பட்டுள்ள ஞானஸ்நானத்தின் முறை குறித்து புதிய ஏற்பாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் கூறப்படவில்லை என்பது குறித்த விளக்கம்.*

மத்தேயு **28:19**ல் கூறப்பட்டுள்ள ஞானஸ்நானத்தின் முறை குறித்து நாம் கவனிக்க வேண்டியது இங்கு அவசியமாக உள்ளது. “பிதா. . . நாமத்தில்” என்று நாம் வாசிக்கிறோம். கிரேக்க மொழியிலிருந்து மொழி பெயர்க்கும் போது “இல்” (நாமத்தில்) என்னும் வேற்றுமை உருபு உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் “உள்” என்று மொழி பெயர்த்திருக்க வேண்டும். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள். . . என்று சரியான பதத்தில் மொழிபெயர்த்திருக்க வேண்டும்.

மத்தேயு **28:19** இந்த மொழி பெயர்ப்பை எபேசுவிலே சில சீஷருடன் பவுல் உரையாடியது குறித்து அப்போஸ்தலர் **19:1-5**ல்

குறிப்பிடப்பட்டுள்ள பகுதியோடு ஒப்பிட்டு பார்ப்பது நல்லது. முதலில் இவர்கள் கிறிஸ்தவர்கள் (இயேசுவின் சீஷர்) என்று பவுல் நினைத்தார். ஆனால் அவர்கள் யோவான் ஸ்நானகனுடைய சீஷர் என்று அவர்களோடு பேசிய பின்பு கண்டுகொண்டார். அவர்கள் யோவான்ஸ்நானகன் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தார்களேயன்றி கிறிஸ்தவ ஞானஸ்நானம் பெறவில்லை. யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானத்திற்குத் தேவையாயிருந்த இரு காரியங்கள் 1. மனந்திரும்புதலும் 2. பாவ அறிக்கையுமாகும். ஆனால் அது எந்தப் பெயரிலும் கொடுக்கப்படவில்லை (மாற்கு 1:4 5 பார்க்கவும்). கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்து எந்த விதமான குறிப்பும் இதில் இல்லை. பெந்தெகொஸ்தே நாளிலிருந்து யோவானுடைய ஞானஸ்நானம் முழு கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்குப் பதிலாக எடுக்கக் கூடியதாகக் கருதப்படவில்லை.

''நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியை பெற்றீர்களா?" என்று பவுல் அவர்களைக் கேட்டபோது "பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" என்று பதிலளிக்கிறார்கள். உண்மையாகவே அவர்கள் பரிசுத்த ஆவியைப்பற்றிக் கேள்விப்படவில்லை. அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று பவுல் கேட்டபோது (மத்தேயு 28:19ல் கூறப்பட்ட அதே வேற்றுமை உருபு இங்கும் பயன்படுத்தப்படுகிறது) ஏன் பவுல் உடனடியாக பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்றீர்களா? என்று கேட்டார் என நாம் கேட்கலாம். இதற்கான விளக்கம் என்னவென்றால்: பவுலுக்கு தெரிந்த ஞானஸ்நானம் ''பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குள்ளாகக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்." எனவே இவர்கள் கிறிஸ்தவ ஞானஸ்நானம் பெற்றிருப்பார்களென்றால் ஞானஸ்நானம்

பெற்றபோது பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்கள். அப். 19:2 3ல் குறிப்பிடப்பட்டுள்ள காரியம் மத்தேயு 28:19ல் கூறப்பட்டுள்ள ஞானஸ்நான முறையை பவுல் அறிந்திருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

*2. "பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில்" ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவில்லை எனக் கருதப்படும்.*

இத்தவறான கருத்துக்கு விளக்கம்: ஒருவர் கிறிஸ்தவ விசுவாசியாக ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் (மத். 16:16 18, யோவான் 20:31, 1 யோவான் 4:15, 15:5). குமாரன் என்று கூறும்போது அது தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மாத்திரம் குறிக்கிறது. ஞானஸ்நானம் கொடுப்பவரும் பெறுபவரும் ஏற்கனவே இந்த அறிக்கையைச் செய்திருப்பதால் குமாரனின் பெயரில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானமேயாகும்.

*3. இயேசு என்பது பெயரைக் குறிக்கும். ஆனால் பிதா மற்றும் பரிசுத்த ஆவி என்பது பெயர்களல்ல, ஆனால் பட்டப் பெயர்கள் என்று கூறுவது குறித்த விளக்கம்.*

உண்மையில், ஆங்கிலத்தில் "வில்லியம்" அல்லது "ஜார்ஜ்" என்று பெயர்களைக் குறிப்பதற்கும் "அரசர்", "ஜனாதிபதி" என்று பதவிகளின் பெயர்களைக் குறிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. இருப்பினும் புதிய ஏற்பாட்டின் ஆக்கியோன்கள் கிரேக்க மொழியில் எழுதுகையில் தேவனை (God) "பிதா" என்று அழைக்கும் போது இந்த வித்தியாசத்தை அவர்கள் ஏற்படுத்தவில்லை. புதிய

ஏற்பாட்டில் அநேக வசனங்களில் “பெயர்” என்பது பிதாவை நேரடியாக குறிப்பிடுவதாக அமைந்துள்ளதைக் காணலாம். “நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும். . .” (யோவான் 5:43). “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே. . . நீர் எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (யோவான் 17:5 6) “...பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன்;...” (யோவான் 17:11,12) “நீதியுள்ள பிதாவே... உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்...” (யோவான் 17:25,26) “...பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை...” (எபேசியர் 3:14,15).

‘‘பெயர்’’ என்ற சொல் பிதாவை குறிப்பதாக பயன்படுத்தப்பட்டுள்ளதால் இதே போல் குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோருக்கும் ஏன் பயன்படுத்தப்படுவதாக கொள்ளக் கூடாது. என்பதற்கு எந்தக் காரணமும் இருக்க முடியாது.

ஆங்கிலத்தில் ‘‘பெயர்’’ என்ற பதத்தை பெயர் குறிப்பிடப்படாதவர்களுக்கும் பயன்படுத்துவது வழக்கம். உதாரணமாக “நீதிபதியின் பெயரில்”, “சட்டத்தின் பெயரில்”, “இராஜாவின் பெயரில்” என்பனவாகும். நீதிபதி, சட்டம், இராஜா ஆகியவை நபர்களின் பெயரல்ல.

4. *இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்ததாக*

*கூறப்படும் வேதப் பகுதிகளில் அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அதனோடு வேறு பெயர்களோ வார்த்தைகளோ சேர்க்கப்படவில்லை. என்பது குறித்த விளக்கம்.*

இது ஒரு யூகமே தவிர வேத வசனங்களின் மூலம் நிரூபிக்க முடியாது. இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளில் "மட்டும்" (only) என்பது போன்ற வார்த்தைகள் குறிப்பிடப்படவில்லை.

புதிய ஏற்பாட்டிலுள்ள சில வேத பகுதிகளின் மூலம் இதற்கு உதாரணம் கொடுக்க முடியும். மாற்கு **5:1 2** ல் மாற்கு ஒரு சம்பவத்தைப் பற்றி இப்படிக் கூறுகிறார்: "அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன்" இயேசுவை சந்திக்கிறான். மத்தேயு **8:28**ல் மத்தேயு இப்படிக் கூறுகிறார்: "பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் இயேசுவைச் சந்திக்கின்றனர்". மத்தேயுவும் மாற்குவும் ஒரே நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகின்றனர். மாற்கு ஒரு மனிதன் என்றும் மத்தேயு "இரண்டுபேர்" என்றும் கூறுகின்றனர். ஆனால் மாற்கு ஒருவனைப்பற்றிதான் கூறுகிறார். ஒருவேளை மாற்கு, "ஒரே ஒரு மனுஷன்" என்று கூறியிருந்தாரென்றால் அவருடைய கூற்றில் வேறுபாடு இருந்திருக்கும். ஆனால் அவர் அப்படிக் கூறவில்லை. "ஒரு மனுஷன்" என்று மாற்கு கூறியுள்ளதால், ஒரு வேளை ஒரு மனிதன் தான் இருந்திருப்பான் என்று நினைக்க வாய்ப்பு உண்டு. ஆனால் அப்படி யூகிப்பது தவறு.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்த வேத பகுதிகளிலிருந்தும் இது குறித்து நாம் சில உதாரணங்களைக் காணலாம். லூக்கா **24:12**ல் பேதுருவோ எழுந்திருந்து, கல்லறையினிடத்திற்கு ஓடி..." என்று லூக்கா கூறுகிறார்.

யோவான் **20:3**இல் "அப்பொழுது பேதுருவும் மற்ற சீஷனும் (யோவான்) கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு,..." என்று யோவான் கூறகிறார். பேதுரு ஓடினான் என்று லூக்கா கூறுகிறார். பேதுருவும் யோவானும் ஓடினார்கள் என்று யோவான் கூறுகிறார்; இருப்பினும் இதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. "பேதுரு மாத்திரம் ஓடினான்" என்றோ "பேதுரு மாத்திரம் தனியாக ஓடினான்" என்றோ கூறியிருந்தால் வேறுபாடு இருந்திருக்கும். ஆனால் லூக்கா இவ்வாறு கூறவில்லை. "மட்டும்" (ONLY) அல்லது "தனியாக" (ALONE) என்ற வார்த்தைகளை வேதம் உபயோகிக்காத போது நாம் அவ்வாறு உபயோகிக்க நமக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

இதே போல் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் மக்களுக்கு கொடுக்கப்பட்டது என்று வேதம் கூறுவதனால் இயேசுவின் நாமத்தில் "மட்டும்" ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று யூகிப்பது சரியானது என்று கூறமுடியாது. இதற்கு வேறு சான்றுகள் இல்லாதவரையில் வேறு பெயர்களோ சொற்றொடர்களோ உபயோகப்படுத்தப்பட்டன என்று கூறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

*5. மத்தேயு 28:19 தவிர புதிய ஏற்பாட்டில் உள்ள வேறு வேத பகுதிகளில் ஞானஸ்நானம் குறித்த வேறு ஒரு முறையும் கூறப்பட்டுள்ளது என்ற கருத்து பற்றிய விளக்கம்.*

இந்தக் கருத்து தவறானது. உண்மையில் வேறு அநேக வித்தியாசமான சொற்றொடர்கள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. அப்போஸ்தலர் **2:38**ல் உபயோகப்படுத்தப் பட்டுள்ள பதம்: "இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்", இங்கே கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள "இல்" (in) என்ற வேற்றுமை உருபு மத்தேயு

28:19 மற்றும் அப். 19:3ல் உபயோகப்படுத்தப்பட்டதிலிருந்து மாறுபட்டது இதனுடைய அர்த்தம், ''அதன் மேலே'' (upon) என்பதாகும். "இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேலே" என்ற சொற்றொடருக்கு "இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தின் மேலே" என்று பொருள் கொள்ள வேண்டும். இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமெனில் ''இயேசுகிறிஸ்துவை (மேசியாவை) அறிக்கையிடுவதன் மேலே'' என்று பொருள் கூறலாம். அப்போஸ்தலர் 2:36ல் பேதுரு கூறும் கூற்றுக்கு ஏற்ப இது அமைந்துள்ளது. ''ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று (மேசியா) இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்''. எனவே அப்போஸ்தலர் 2:38ல் கூறப்பட்டுள்ள சொற்றொடரானது கிறிஸ்தவ ஞானஸ்நானம் பெறுவதற்கு அடிப்படைத் தகுதியாகக் கொள்ளலாம். அதாவது இயேசுவே கிறிஸ்து (மேசியா) என்று அறிக்கையிடுவதாகும். எந்த சொற்றொடர் உபயோகப்படுத்தப்பட்டிருப்பினும் இந்த அடிப்படைத் தகுதி மாறாததாகும்.

அப். 8:15-16 மற்றும் 19:5ல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர் "கர்த்தராகிய இயேசுவின் (நாமத்தில்) நாமத்தினாலே" என்பதாகும். இங்கே உபயோகப்படுத்தப்பட்டுள்ள "இல்" (in) என்ற ஒற்றுமை உருபு மத்தேயு 28:19 மற்றும் அப்போஸ்தலர் 19:3ல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதற்கு ஒத்ததாகும். அதன் அர்த்தம்: உள்ளாக (into). ஒருவருடைய நாமத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவது என்பது அந்த நபருக்குள்ளாகக் கிடைக்கும் பாதுகாப்பு மற்றும் அனைத்து காரியங்களுக்குமுள்ளாகக் கடந்து வருவதாகும். எனவே இதில்

பயன்படுத்தப்படும் வார்த்தையானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையோ அல்லது பிதா குமாரன் பரிசுத்த ஆவி இதில் ஏதோ ஒன்றையோ அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்படுவதாகும். அப்போஸ்தலர் 8:16, 19:6ல் கூறப்பட்டுள்ள அதே கருத்துத்தான் மத்தேயு 28:19லும் கூறப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் 10:48ல் "கர்த்தருடைய நாமத்தினாலே" என்று ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பில் கூறப்பட்டுள்ளது. சில மொழிபெயர்ப்புகளில் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே" என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு முன்பு நாம் கவனித்த பகுதிகளில் உபயோகப்படுத்தப்பட்ட வேற்றுமை உருபுக்கும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வேற்றுமை உருபுக்கும் வித்தியாசம் உள்ளது. இதனை "உள்" (in) என்று மொழி பெயர்க்கலாம். கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைப்பதற்கு பொதுவான தகுதியாக இதனைக் கொள்ளலாம். அல்லது குறிப்பிட்ட முறையில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம். மாறுபட்ட வேத வாக்கியத்தின் பகுதிகளை காணும்போது ஆதித்திருச்சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் பின்பற்றப்பட்டன என்பதை அறியலாம்.

என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால் பிரச்சனைகள் உண்டாகாமலிருக்க புதிய ஏற்பாட்டுக்கால கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்திற்காக குறிப்பிட்ட ஒரு முறையை மாத்திரம் பின்பற்றவில்லை. சடங்காச்சாரத்தை விட தனிப்பட்ட அனுபவத்தை அவர்கள் முக்கியமாகக் கருதினார்கள். குறிப்பிட்ட ஒரு முறையைத் திட்டமாக நடைமுறைப்படுத்தக் கட்டாயப்படுத்தப் பட்டபொழுது உண்மையான வாழ்க்கை முறை, பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் இவற்றினடிப்படையிலேயே சபையானது முடிவுகளை எடுத்தது.

*6. ஞானஸ்நானமானது பழைய உடன்படிக்கையின்படி விருத்தசேதனத்திற்கு அடையாளமாக உள்ளது. எனவே சரியான முறையில் ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவன் விருத்தசேதனம் பெறவில்லை, என்ற கருத்திற்கான விளக்கம்.*

ரோமர் 6:4 மற்றும் கொலோசெயர் 2:12ல் ஞானஸ்நானமானது ''அடக்கத்திற்கு'' மாதிரியாக கூறப்பட்டுள்ளது. ''ஞானஸ்நானத்திலே அவரோடேகூட (கிறிஸ்து) அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும்," அடக்கம் செய்வதற்கு முன்பாக அடக்கம் செய்யப்பட ஒரு இறந்து போன சரீரம் இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தில் இறந்துபோன சரீரம்-"பழைய மனுஷன்" "சரீரம்" "பாவ சரீரம்" "மாம்சம்" "... நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 6:6) "கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும்,..." (ரோமர் 8:10) "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." (கலாத்தியர் 5:24) இங்கே "சரீரம்", "மாம்சம்" என்று குறிப்பிடப்படுவது நாம் காணும் சரீரத்தைக் குறிப்பதல்ல. ஆனால் ஆதாமிலிருந்து பெற்ற இச்சையுள்ள, மீறுதல் குணம் கொண்ட தன்மையைக் குறிப்பிடுகிறது. கர்த்தரும் இரட்சகருமாய் இயேசுவை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளும் போது பழைய சுபாவம் ஒழிந்துபோகிறது. பிறகு ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் செய்யப்படுகிறது.

ஒரு காரியம் தெளிவாகத் தெரிகிறது. ஒரு மனிதனின் உயிரைப்போக்க அவனைப் புதைப்பதில்லை. அவனை அடக்கம் செய்ய வேண்டுமெனில் அவன் ஏற்கனவே இறந்திருக்க

வேண்டும். இதே போல இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தினால் ஞானஸ்நானத்தின் மூலம் பழைய மனிதனை அடக்கம் செய்ய பழைய மனிதன் ஏற்கனவே மரித்திருக்க வேண்டும். ஞானஸ்நானம் பழைய சுபாவத்தை சாகடிக்காது. பழைய சுபாவம் ஏற்கனவே மரித்து விட்டது என்பதற்கான வெளிப்படையான அடையாளமே ஞானஸ்நானமாகும். ஞானஸ்நானத்தின் மூலம் பழைய சுபாவத்தை சாகடிக்க விரும்புகிற ஒருவன் வேதத்தினடிப்படையில் செயல்படாததால் அது அவன் விரும்பும் பலனைத் தராது.

கொலோசெயர் 2:11,12ல் பவுல் இதனைத் தெளிவுபடுத்துகிறார். ''நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்''. பிறகு ''ஞானஸ்நானத்திலே அவரோடே அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறோம்" என்று கூறுகிறார். இது சரியான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதனை மாற்றி அமைக்க முடியாது. ''கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே முதலாவது நாம் மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைய வேண்டும்". பிறகு ஏற்கனவே களையப்பட்ட "சரீரத்தை" ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் செய்ய வேண்டும். ''விருத்தசேதனம்'' என்பது ''சரீரத்தைக் களைவதாகும்''. ஞானஸ்நானம் என்பது களையப்பட்ட சரீரத்தை அடக்கம் செய்வதாகும். எனவே விருத்தசேதனம் என்பது "ஞானஸ்நானம்" அல்ல. விருத்தசேதனம் என்பது "அகற்றுதல்" ஞானஸ்நானம் என்பது "அடக்கம்பண்ணப்படுதல்".

பிலிப்பியர் 3:3ல் புது உடன்படிக்கையின் உண்மையான

''விருத்தசேதனம்'' குறித்து பவுல் கூறுகிறார். ''ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்'' என்று கூறுகிறார். இங்கே ஞானஸ்நானத்தைக் குறித்து அவர் குறிப்பிடவில்லை. மாறாக "மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல்" என்ற சொற்றொடரானது கொலோ. 2:11ல் கூறப்பட்டுள்ள "மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தை அகற்றுவதற்குத்" தொடர்புடையதாக உள்ளது. விருத்தசேதனம் என்பது மாம்சத்தின் மேலுள்ள நம்பிக்கையைக் கைவிடுவதாகும். எனவே இது மாம்சத்தை அகற்றுவதற்குச் சமமாகிறது. ஞானஸ்நானமானது ''மாம்சத்தை'' அகற்றி பின்பு அதனை அடக்கம் செய்வதாகும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையனவாகும். ஆனால் இவை இரண்டும் ஒன்றல்ல.

7. *ஞானஸ்நானம் குறித்த வேதத்தின் கருத்துக்களின் முக்கியத்துவத்தை ஞானஸ்நானம் பெறுகையில் ஒருவன் சரியாக அறியவில்லை என்றால் அவனுடைய ஞானஸ்நானம் பயனற்றது. அவன் பின்னால் இது குறித்து முழுமையாக அறிந்து கொண்டால் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது குறித்த தவறான கருத்துக்கான விளக்கம்.*

''சரியான புரிந்து கொள்ளுதல்'' என்பது எதனை அடிப்படையாகக் கொண்டு கூறுவது என்பது குறித்து முடிவு செய்வது கடினம். ஞானஸ்நானம் குறித்த அனைத்துக் கருத்துக்களையும் அறிந்துகொள்வது என்பது கடினம். புதிய ஏற்பாட்டுத் திருச்சபையானது ஞானஸ்நானத்திற்கு இது ஒரு தகுதி என்று நிர்ணயிக்கவில்லை. ஏனெனில் புதிதாக

மனமாற்றமடைபவர்கள் கிறிஸ்துவை அறிக்கை செய்தால் உடனடியாக ஞானஸ்நானம் கொடுத்தனர். எனவே இந்த குறைந்தகாலக் கெடுவுக்குள் ஞானஸ்நானம் குறித்த முழு கருத்துக்களையும் அறிந்துகொள்வது முடியாத காரியமாகும்.

மேலும் தேவனுடைய மகத்துவமான காரியங்களை, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அறிந்து கொள்ள முடியும். எனவே "புதிய பிறப்பு" அல்லது "பரிசுத்த ஆவியில் பெறும் ஞானஸ்நானம்" என்பவைகளும் இதற்குப் பொருந்தும். மேலும் இவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அறிந்து கொள்ள முடியும். ஆனால் காலங்கடந்து இந்த சத்தியங்களை அறிந்து கொள்வதால் இவருடைய ஆரம்ப அனுபவம் செல்லுபடியானதல்ல என்று கூறமுடியாது. மேலும் இதனால் இவர் மீண்டும் மறுபிறப்பு அடைய வேண்டுமென்பதோ மறுபடியும் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்பதோ தேவையற்றது. மறுபிறப்போ, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவதோ தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதோ எதுவானாலும் தேவன் விரும்பும் முக்கியமான காரியம் விசுவாசமும் கீழ்ப்படிதலுமாகும். புரிந்து கொள்ளுதல் தொடர்ந்து வரும் அனுபவமாகும்.

8. *குறிப்பிட்ட ஒரு காரியத்தைக் குறித்து குறைந்தபட்சம் வேறு ஒரு வேத பகுதியானது இருந்தாலொழிய அந்தக் காரியத்தை ஆதார பூர்வமாக எடுத்துக் கொள்ள முடியாது என்ற தவறான கருத்தைப் பற்றிய விளக்கம்.*

"கர்த்தர் சொல்லுவதை குறைந்தபட்சம் இருமுறை கூறினால் தான் அவர் என்ன கூறுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்" என்ற கூற்றுக்கு மேற்கூறிய கருத்து இணைந்து

போகிறது. ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவன் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

"...இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்'' என்று உபாகமம் 19:15 மற்றும் மத்தேயு 18:17ல் கூறப்படும் வேத பகுதிகளின் அடிப்படையில்தான் குறைந்த பட்சம் ஒரு காரியத்தைக் குறித்து இரண்டு வேத பகுதிகளாவது இருக்க வேண்டுமென்ற கருத்து உள்ளது. மனிதர்களுக்கிடையே ஏற்படும் வாக்குவாதங்களை நியாயம் விசாரிக்கும் போது தான் இப்படிப்பட்ட முறையில் இரு சாட்சிகளைப் பயன்படுத்தி நியாயத்தை நிலை நிறுத்தலாம். ஆனால் தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளுக்கு இம்முறை பொருந்தாது. இதனை வேதத்தின் கருத்துகளுக்குப் பயன்படுத்துவோமென்றால் ஒவ்வொரு கருத்துக்கும் இருவேறு வேத பகுதிகளைக் காண்பது அரிது.

ஒரு காரியத்தைக் குறித்து இரு வேறு ஆசிரியர்களின் கூற்றினை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு காரியத்தைக் குறித்து ஒரே ஆக்கியோன் எத்தனை முறை கூறினாலும் அவர் ஒரே சாட்சியாகத்தான் கருதப்படுவார். ஆனால் இந்த முறையை வேதத்தின் காரியங்களுக்குப் பயன்படுத்தும்போது மாறுபட்ட கருத்தை உடையதாக உள்ளது. 2 தீமோத்தேயு 3:16ல் பவுல் இவ்வாறு கூறுகிறார்: ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;... பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கிறது''. வேதவாக்கியங்கள் எல்லாம்.... பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று பவுல் கூறுகிறார். வேறு வேதவாக்கியங்களால் உறுதி செய்யப்பட்டால் தான் வேத வாக்கியங்களெல்லாம் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றன என்று அவர் கூறவில்லை. யோவான் 10:35ல் இயேசு சொன்னது

போல "வேதவாக்கியங்கள் தேவனுடைய வார்த்தை யானால் அதுவே தேவனுடைய வார்த்தை என்று உறுதிப்படுத்த போதுமானது. பொய்யுரையாத தேவன் (தீத்து 1:3) "தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; (நீதி. 30:5) "உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்பவைகளாகும்.

அநேக முக்கியமான வசனங்கள் வேதத்தில் ஒரே ஒரு முறை தான் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக லாசருவை கல்லறையை விட்டு வெளியே வருமாறு (மார்த்தாள் மரியாளின் சகோதரன்) கூறிய நிகழ்ச்சி. யோவான் 11 மற்றும் 12ல் ஒரு முறை தான் கூறப்பட்டுள்ளது. இயேசு ஜெபித்த பெரிய ஜெபம் யோவான் 17ல் தான் கூறப்பட்டுள்ளது. லாசரு மற்றும் பணக்காரன் ஆகியோரின் மரணத்திற்குப்பின் நடந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சி. லூக்கா 16ஆம் அதிகாரத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" என்ற வாக்குத்தத்தம் மத்தேயு 18:20ல் மட்டுமே உள்ளது. "உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்." என்ற வாக்கியம் எபேசியர்2:6,7ல் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. "மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்" என்ற கூற்று 1 கொரிந்தியர் 15:29ல் மட்டும் தான் கூறப்பட்டுள்ளது. தேவனுடைய வருகையின் போது விசுவாசிகளாகிய நாம் அவருக்கு எதிர்கொண்டு போவோம் என்பது குறித்து 1 தெசலோனிக்கேயர் 4:17ல் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு இவைகள் ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும்.

ஆனால் நாம் ஒரு முக்கிய காரியத்தை ஒத்துக் கொள்ள வேண்டும். ஒரு காரியம் வேதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட

இடங்களில் கூறப்பட்டிருக்குமாயின் அவைகள் எல்லாம் அந்தக் கருத்தை ஆதரிப்பதாகவே இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தின் விஷயத்திலும் இது பொருந்தும். ஞானஸ்நானம் குறித்துக் கூறப்பட்டுள்ள போதனையானது அது பற்றிக் கூறப்பட்டுள்ள மற்ற போதனைகளோடு ஒத்திருக்க வேண்டும். மத்தேயு 28:19 இதில் உள்ளடங்கியதாகும்.

*9. மத்தேயு 28:19ல் கூறப்பட்டுள்ள "பிதா குமாரன் பரிசுத்த ஆவியினாலே" என்ற சொற்றொடர் அதிகாரபூர்வமானதல்ல எனவே இதனை வேதத்திலிருந்து எடுத்துவிடவேண்டும் என்பது குறித்த விளக்கம்.*

இது குறித்து விளக்கமாக கூற இயலாது. இருப்பினும் சில அடிப்படை கருத்துக்களை கீழ்கண்டவாறு விளக்கலாம்.

(1) தற்போது கைவசமுள்ள அனைத்து கிரேக்க வாசகங்களிலும் மத்தேயு 28:19 இடம் பெற்றுள்ளது.

(2) இதற்கு முந்தைய வாசகங்களில் (லத்தீன் மற்றும் சிரியாக் மொழியின் மொழி பெயர்ப்புகளில்) மத்தேயு 28:19 வேறு எந்த மாறுபட்ட முறையிலும் இல்லை.

(3) எசுபியஸ் என்ற ஆதித்திருச்சபையின் தந்தை ஒருவர் கி.மு. 320ல் வாழ்ந்தார். இவர் மத்தேயு 28:19ன் ஒப்புக் கொள்ளப்பட்ட வடிவத்திலிருந்து மாறுபட்ட முறையில் இவருக்குக் கிடைத்த கையெழுத்து பிரதிகளில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரது மற்ற குறிப்புகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட வசனத்தின் மாதிரியை ஊர்ஜிதம் செய்துள்ளார். எனவே இவரது கருத்தினை முடிவானதாக ஏற்றுக் கொள்ள இயலாது. எப்படி இருந்தாலும் எசுபியஸின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு

பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொண்ட வாசகத்தை மறுக்க இயலாது.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மத்தேயு 28:19ன் வாசகத்தைத் தள்ளிவிட வேறு ஒரு ஆதாரம்: உள்ளான மற்றும் கொள்கையினடிப்படையிலான வாதங்களாகும். இவைகள் வாதத்திற்குட்பட்டவைகள். ஆனால் எந்த வகையான நோக்கமுமற்றதாகும். 8வது குறிப்பில் நான் குறிப்பிட்டபடி இத்தகைய வாதங்கள் பயனற்றவைகளாகும். மத்தேயு 28:19ன் உறுதிப்பாட்டைக் குறித்த வாதத்தை நாம் ஏற்றுக் கொள்வோமாயின் புதிய ஏற்பாட்டில் அநேக வசனங்கள் இந்த வகையில் சர்ச்சைக்குரியதாக உள்ளன என்றாகும். இதற்கு ஒரு முடிவில்லாமற் போய்விடும். கடைசியில், வேத வசனம் கொள்கைகளை முடிவு செய்வதற்குப் பதிலாக கொள்கைகள் வேத வசனங்களை வரையறுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஞானஸ்நானம் குறித்த இத்தகைய போதனைகள் சில கேள்விகளை எழுப்புகின்றன. அவைகளில் ஒன்று; ஞானஸ்நானத்திற்குப் பின்பு அதற்கான பலன்களை, ஒருவர் தனது வாழ்வில் பெறாவிடில் அவருடைய ஞானஸ்நானம் பயனற்றதா?

அப்படியல்ல, பரிசுத்த ஆவியில் பெறும் ஞானஸ்நானத்தோடு இதனை ஒப்பிட்டுப் பேசலாம். வேத வாக்கியங்களுக்கேற்ப ஒருவர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றிருந்தபோதிலும் அவருடைய வாழ்வில் அதற்கான பலன்களை அவர் பெறாமலிருக்கலாம். அதற்கான பரிகாரம் மீண்டும் ஆவியில் ஞானஸ்நானம் பெற வேண்டியதில்லை. உண்மையான பரிகாரம்:

ஏற்கனவே பரிசுத்த ஆவியில் பெற்ற ஞானஸ்நானம் பயனுள்ளதாக அமைய தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் பாவ மன்னிப்பு, ஒப்புக்கொடுத்தல், ஜெபம், வேதவாசிப்பு இவற்றைத் தவறாது கடைபிடிக்கவேண்டும்.

இதே தத்துவத்தை தண்ணீரில் பெறும் ஞானஸ்நானத்திற்கும் உபயோகிக்கலாம். தண்ணீரில் பெறும் ஞானஸ்நானத்திற்கான பலன் சில சமயங்களில் ஒருவருக்கு கிடைக்காமற் போகலாம். இதற்குக் காரணம் அவர் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவதில் தவறிழைப்பதாகும். அப்படிப்பட்ட மனிதனுக்கு மீண்டும் ஞானஸ்நானம் பெறுவது சுலபமான காரியம். நான் அறிந்த சிலர் மூன்று அல்லது நான்கு முறை ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். மீண்டும் ஒரு முறை ஞானஸ்நானம் பெற அவர்களைச் சம்மதிக்க வைப்பது மிகவும் சுலபம். இதனால் தண்ணீரில் பெறும் ஞானஸ்நானம் ஒரு வகையான ”மத தடுப்பு ஊசி” போட்டுக் கொள்ளுமளவிற்கு தரம் குறைந்து போவதற்கு ஏதுவாகிறது. முதல் முறையில் பயன் கிடைக்கவில்லை எனில் கடைசியில் பயன் கிட்டும் வரை தொடர்ந்து செய்யும் காரியமாக இது அமைந்து விடுகிறது. பலன் கிடைத்தும், சில வருடங்களில் அது மறைந்துவிடுமாயின் மீண்டும் அவர் “தடுப்பு ஊசி” (மீண்டும் ஞானஸ்நானம்) போட்டுக் கொள்ள வேண்டும் என்பது வேதத்திற்கடுத்த ஞானஸ்நானமல்ல.

தான்பெற்ற ஞானஸ்நானத்தின் உறுதிப்பாட்டைக் குறித்து ஒருவருக்கு சந்தேகம் ஏற்படுமாயின் அப்படிப்பட்ட நபரைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் உண்மையில் “அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்களா”? பழைய பாவத்தன்மை, அதனுடைய கட்டுகள், அதன் தவறான நிலைகள், தீய உறவுகள், மீறுதல்கள் இவற்றினின்று விடுபட்டிருக்கிறீர்களா? அவைகள்

உங்களை மீண்டும் வேதனைப்படுத்தாதபடிக்கு கண்காணாத தூரத்தில் ஆழத்தில் அமிழ்த்தப்பட்டிருக்கின்றனவா? அதன் பிறகு மீண்டும் "உயிர் பெற்று"-புதிய வாழ்வின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் விசுவாசத்தோடு எழுந்து நடக்கிறீர்களா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உங்கள் பதில் "ஆம்" என்றால் நீங்கள் "அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள்" என்று பொருள். இதற்குப் பின்பு மீண்டும் அதனைத் தோண்டி புதிய முறையில் இரண்டாம் முறை அடக்கம் செய்ய நினைப்பது முட்டாள்தனமான காரியமாகும்.

மாறாக, இதற்கு சரியான முறையில் "ஆம்" என்று பதில் கூற முடியவில்லை எனில் நீங்கள் "அடக்கம்" செய்யப்படவில்லை. தேவனிடத்தில் மன்றாடி நான் என்ன செய்யவேண்டும் என்று கேளுங்கள். நிச்சயமாக நீங்கள் அடக்கம் செய்யப்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பார். அப்படியானால் நீங்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டியதில்லை. நீங்கள் முதல் முறையாக உண்மையான ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

எங்கே "அடக்கம்" மற்றும் "உயிர்த்தெழுதல்" இல்லையோ அங்கே "ஞானஸ்நானமும்" கிடையாது.

## *ஆசிரியரைப்பற்றி. . .*

டெரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இந்த இயேசுவின் சந்திப்பினால், என்னில் ஆழமாக இரு கருத்துக்கள் பதிந்துவிட்டன: முதலாவது இயேசு ஜீவிக்கிறார் என்பது. இரண்டாவது வேதாகமம் என்றும் மாறாதது; எக்காலத்திற்கும் பொறுத்தமுள்ளது; தற்காலத்தில்

நாம் பின்பற்ற வேண்டிய கருத்துக்களைக் கொண்ட நூல் என்பதாகும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948ல் இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸீம் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். லிடியாவைப் போல் ரூத்தையும், அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இன்றைக்கு டெரிக் பிரின்ஸீடன் **(Today with Derek Prince)** என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் உள்ள மக்கள் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன்,

ஸ்பேனிஷ், ரஷ்யன்,டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார், 500 ஒலி நாடாப் போதனைகளையும், 160 வீடியோ போதனைகளையும் வழங்கியுள்ளார். இவை அறுபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

# மீட்கப்பட்டோர் இப்படிச் சொல்வார்களாக[1]

என்னுடைய சரீரம் மீட்கப்பட்டு[2], சுத்திகரிக்கப்பட்டு[3], இயேசுவின் இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறதினாலே[4], அது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது.[5]

என் சரீரத்தின் உடலுறுப்புகள், தேவனுடைய மகிமைக்கும் ஊழியத்திற்கும் ஒப்புக் கொடுக்கப்பட்ட நீதியின் அவயவங்களாயிருக்கிறது.[6]

என்னிடத்தில் பிசாசிற்கு எந்தப் பங்குமில்லை. என் மேல் அதிகாரம் செலுத்தவோ, கணக்கைத் தீர்த்துவை என்று சொல்லவோ பிசாசிற்கு உரிமையில்லை. அனைத்தும் இயேசுவின் இரத்தத்தினாலே செலுத்தித் தீர்க்கப்பட்டாயிற்று.[7]

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் நான் சாத்தானை மேற்கொண்டேன். மரணமே நேரிடுவதாயினும் அதிலிருந்து தப்பும்படி என் ஜீவனை பொருட்படுத்தமாட்டேன்.[8]

என் சரீரம் கர்த்தருடையது; கர்த்தர் என் சரீரத்திற்குரியவர்.[9]

---

[1] சங்கீதம் 107:2
[2] 1 கொரிந்தியர் 6:19
[3] எபேசியர் 1:7
[4] 1 யோவான் 1:7
[5] எபிரெயர் 13:12
[6] ரோமர் 6:13
[7] ரோமர் 3:23-25, 8:33-34
[8] வெளி. 12:11
[9] 1 கொரிந்தியர் 6:13

# எங்களுடைய மற்ற வெளியீடுகள்

1) ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்
2) தெய்வீக பரிமாற்றம்
3) பிசாசுகளை துரத்துதல்
4) அளவற்ற அன்பு
5) வாழ்வளிக்கும் விசுவாசம்
6) நீதியான வாழ்கைக்கு அடித்தளங்கள்
7) தேவனின் மருந்து புட்டி
8) உங்கள் பணத்தைக் குறித்த தேவனுடைய திட்டம்
9) விட்டுக்கொடுத்தலின் கிருபை
10) உங்களில் உள்ள தூய ஆவியானவர்
11) சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?
12) தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்
13) வாழ்க்கையின் கசப்பான ஊற்று
14) லூசிஃபரின் சுயரூபம்
15) அறிக்கையிடுதலின் ஆற்றல்
16) ஆவிக்குரிய போராட்டம்
17) சோதிக்கப்படுதல்
18) அவர்கள் பிசாசுகளை துரத்துவார்கள்
19) அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்.....
20) பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?
21) சுயமாய் வேதத்தை கற்பதற்கான பாடங்கள்

Write for a free catalogue of books, CDs, DVDs & Micro SD cards:

உங்கள் ஜெப தேவைகளுக்கும், ஊழியத்தை தாங்கும் உதாரத்துவ காணிக்கைகளை அனுப்பவும், மேலும் டெரிக் பிரின்ஸின் புத்தகங்கள், வீ.சீ.டீ.க்கள், டீ.வீ.டீக்கள், மைக்ரோ எஸ்.டீ கார்டுகள் வாங்கவும், கீழ்காணும் முகவரியில் எங்களுடன் தொடர்புக் கொள்ளுங்கள்:

**DERECK PRINCE MINISTRIES - INDIA**

C/o DPM IMPEX

1-C, EVR Road, Puthur

Trichy - 620 017, Tamil Nadu, India.

E-Mail: admin@derekprince.in

Phone: 00-91-98430 55414, 95855 38201.

**Derek Prince Ministries - India**

எங்களது இணையதள்த்தில் உங்களுக்காக சிறப்பு சலுகைகள் மற்றும் வெளியீடுகள் காத்திருக்கின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையதள முகவரிக்கு சென்று பாருங்கள்.

**www.derekprince.in**

ஃபேஸ்புக்கில் எங்களது முகவரி:
Derek Prince Ministries - India

**Derek Prince Ministries - India**

**www.derekprince.in**

Find us on Facebook, by typing:
Derek Prince Ministries - India